Registered as a Newspaper பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 317

திங்கட்கிழமை 09 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 22 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054

உலகக் கிண்ணக் கொண்டாட்டம்
பக் :- 08-09

## பிக்குவுக்கு கைகட்டி நின்ற பொலிஸார்

# தமிழர்களின் போராட்டத்தை முரட்டுத்தனமாக அடக்கினர்

### மட்டக்களப்பில் அராஜகம்



**மட்டக்களப்பு, ஒக்ரோபர் 9**

**பௌத்த பிக்கு பொலிஸாரின் தொப்பியை, நட்சத்திரச் சின்னத்தைக் கழற்றி கீழ்த்தரமான வார்த்தைகளால் திட்டும் போது அமைதியாக பார்த்துக்கொண்டிருந்த பொலிஸார், அமைதியான முறையில் போராட முற்பட்ட எங்களை அடக்குவதானது இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்பதை வெளிப்படுத்துகின்றதாக மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.** »15

## பாடசாலை மாணவன் சடலமாக மீட்பு!

யாழ்., ஒக். 9
தவறான முடிவெடுத்து யாழ். நகரப் பாடசாலையில் கல்வி பயிலும் 15 வயதான மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள அவரது வீட்டின் அருகிலுள்ள வளவில் நேற்றுக் காலை மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக கோப்பாய் »15

## தமிழகத்துக்கான கப்பல்சேவை உத்தியோகபூர்வமாக ஆரம்பம்

### பரீட்சார்த்த பயணம் நேற்று வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 9
தமிழகம் நாகப்பட்டினத்தில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறை வரையிலான 'செரியா பாணி' என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை நாளை ஆரம்பமாகவுள்ளது. அதன் பரீட்சார்த்தப் பயணம் நேற்று வெற்றிகரமாக இடம்பெற்றது. »15

### தமிழர்கள்தான் இந்தியாவின் பாதுகாப்பு

## இனியாவது எங்கள் விவகாரங்களில் பாரததேசம் குரல் கொடுக்கவேண்டும்

### நீதிபதி விவகாரத்தையொட்டி சரவணபவன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9
இந்தியாவின் அரண் தமிழர்கள் தான். இந்தியா அதை உணர்ந்து கொண்டு இனியாவது எங்களுக்காக குரல் கொடுக்கவேண்டும். இந்த நாட்டின் நீதியை நிலைநாட்டும் நீதிபதி ஒருவர் வெளியேறிய பின்னும் ஏன் இந்தியா மௌனம் »15

### ரிக்ரொக்கால் விபரீதம்

## படகு கவிழ்ந்ததில் 2 இளைஞர்கள் சாவு!

மட்டக்களப்பு, ஒக். 9
மட்டக்களப்பு, நாவலடிக் குளத்தில் நேற்றுக் காலை இளைஞர்கள் குழுவொன்றை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 2 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். விபத்து ஏற்பட்டபோது »13

## கதவடைப்பு எப்போது? இன்று ஆராய்வுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 9
நீதிபதி சரவணராஜா அச்சுறுத்தப்பட்டு பதவி துறந்து நாட்டைவிட்டு வெளியேறியுள்ள நிலையில் நீதித்துறையின் சுயாதீனத்தை வலி »15

## சாவகச்சேரியில் ஆயுதங்கள் மீட்பு!

யாழ்., ஒக். 9
சாவகச்சேரி, அறுகுவெளியில் மோட்டார் குண்டு மற்றும் ரி-56 துப்பாக்கி என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.
நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை மாடு மேய்ப்பதற்காகதனது கால்நடைகளைக் கொண்டு சென்ற »13

## ஹெரோய்னுடன் இளைஞர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 9
உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் நேற்றுமுன்தினம் இரவு »15

## விபத்தில் சிக்கியவர் பரிதாபகரமாகச் சாவு!

மன்னார், ஒக். 9
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதியதால், காயமடைந்து சிகிச்சை பெற்று வந்தவர் நேற்று »15

## நீதிமன்ற அறையிலிருந்த 120 கிலோ கஞ்சா மாயம்

### மன்னார், மல்லாகத்தை தொடர்ந்து கிளிநொச்சி நீதிமன்றில் சம்பவம்

கிளிநொச்சி, ஒக். 9
கிளிநொச்சி நீதிமன்ற பதுகாப்பறையிலிருந்த 120 கிலோ கஞ்சா பொதி மாயமான »15



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரவு – செலவுத் திட்டத்தை எதிர்ப்பதற்கு எதிரணி முடிவு

கொழும்பு, ஒக். 9

வரவு- செலவுத் திட்டத்தில் சில அமைச்சுகளுக்கான நிதியொதுக்கீடு தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தி, வரவு - செலவுத்திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் 13ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாதீட்டை முன்வைத்து உரையாற்றவுள்ளார். நவம்பர் 14ஆம் திகதி 2ஆவது வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகும். 2ஆம் வாசிப்புமீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி இடம்பெறும். நவம்பர் 22ஆம் திகதி 3ஆம் வாசிப்புமீதான விவாதம் ஆரம்பமாகும். டிசெம்பர் 13ஆம் திகதி பாதீடு மீது இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படும்.

பாதீட்டு விவாதத்தில் அமைச்சுகளுக்கான ஒதுக்கீடுகள் தொடர்பில் தனித்தனியாக விவாதம் நடத்தப்படும். இதன்போது சில அமைச்சுகளுக்கான ஒதுக்கீடு தொடர்பில் விவாதத்தில் எதிரணி வாக்கெடுப்பைக்கோரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மின்சக்தி அமைச்சு, விவசாய அமைச்சு, சுகாதார அமைச்சு, வெளிவிவகார அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு உட்பட மேலும் சில அமைச்சுகளுக்கான நிதியொதுக்கீட்டை தோற்கடிக்க முயற்சி எடுக்கப்படுகின்றது என்றும் தெரியவருகிறது.

அரச தரப்பு பலமாக உள்ள நிலையில், இப்படியானதொரு முயற்சியில் ஈடுபடுவது ஏற்புடைய நடவடிக்கையா? என்ற கேள்வியும் எதிரணி தரப்பில் எழுந்துள்ளது.

அதேவேளை பாதீட்டு விவாதக் காலப்பகுதியில் ஆளுங்கட்சியினரை கொழும்பிலேயே இருப்பதற்கான ஆலோசனையும் ஆளுந்தரப்பிலிருந்து விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-44)

# வடகீழ் பருவ மழை இவ்வாரம் ஆரம்பம்

புவியியற்றுறை விரிவுரையாளர் பிரதீபராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாக மிதமான மழை எதிர்வரும் 12ஆம் திகதிவரை கிடைக்கப்பெறும். அதற்குப் பின்னர் இம்மாதம் 24ஆம் திகதிக்குப் பின்னர் மழை ஆரம்பமாகி நவம்பர் மாதம் 3ஆம் திகதி வரை தொடரக்கூடும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் விடுத்த அறிக்கையில் உள்ளதாவது:-

இவ்வாண்டு எல்நினோ ஆண்டு என்பதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் வடகீழ்ப் பருவச் சராசரி மழையைவிட 14 - 19 வீதம் வரை குறைவாகவே கிடைக்கும். இவ்வாண்டு இரண்டாவது இடைப்பருவக் காலத்தில் கிடைக்க வேண்டிய சராசரி மழையின் வீதத்தில் 38 வீதம் மட்டுமே கிடைக்கும்.

காலநிலை மாற்றம் காலநிலைப் பருவகாலங்களின் தொடக்க காலம் மற்றும் முடிவுறும் காலங்களில் பெருமளவு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாண்டு தென்மேற்கு பருவக்காற்று இலங்கைக்கு ஜூலை நடுப்பகுதியிலே வீசத் தொடங்கியது. வழமையாக செப்ரெம்பர் 10ஆம் திகதியோடு விலக வேண்டிய தென்மேற்கு பருவக் காற்று ஒக்ரோபர் 14ஆம் திகதிக்கு பின்னரே படிப்படியாகப் பின்வாங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே வடகீழ் பருவக்காற்று நவம்பர் மாதம் 10ஆம் திகதிக்குப் பின்னரே இலங்கைக்கு வீசத் தொடங்கும். வழமைபோன்று அல்லாமல் இம்முறை வடகீழ்ப் பருவக்காற்றின் காலம் குறைவாகவே இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வடகீழ் பருவக் காற்றின் மழை நாள்கள் 21 முதல் 27 ஆகவே இருக்கும். இந்த ஆண்டு வடகீழ் பருவத்தில் நான்கு முதல் ஆறு தாழமுக்கங்கள் வங்காள விரிகுடாவில் தோன்றும் வாய்ப்புள்ளது. இம்மாத இறுதியில் அரபிக் கடலில் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது.

விவசாயிகள் எதிர்வரும் காலப்பகுதியில் கிடைக்கும் மழையைப் பொறுத்து விதைப்புச் செயற்பாடுகளைத் தீர்மானிக்கலாம். நீண்ட கால நெல்லினங்களை விதைக்காது குறுங்கால விதையினங்களை விதைப்பதன் மூலம் 2024 ஜனவரிக்குப் பின்னான காலப்பகுதியில் நீர்ப்பாசன நீரை எதிர்பார்க்கத் தேவையில்லை. இயலுமான வரை சேற்று விதைப்புக்கான பெருமழையை எதிர்பாராது புழுதி விதைப்புக்கான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாக மழைக் காலம் ஒன்றை எதிர்கொள்வதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ளுதல் வேண்டும். இடிமின்னல்களின்போது பாதுகாப்பு முறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் - என்றுள்ளது. (ச)

# இஸ்ரேலிலுள்ள இலங்கையர் தொடர்பில் மிகுந்த கரிசனை!

இஸ்ரேலிலுள்ள இலங்கையர்கள் தொடர்பில் அங்குள்ள இலங்கைத் தூதரகம் அவதானத்துடன் உள்ளது என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அங்குள்ள இலங்கைத் தூதரகத்தைத் தொடர்பு கொண்டு இலங்கைப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளது என்றும் புலம்பெயர்ந்த பணியாளர்களைப் பாதுகாப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராகவுள்ளது என்றும் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார். இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஹமாஸ் ஆயுத தாரிகள் ஏவுகணை தாக்குதல்களை நடத்தியுள்ள நிலையில் இஸ்ரேல் பதில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. இதுவரையில் இரு தரப்பிலும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-44)

# படத்தைப் பயன்படுத்த தடை விதித்த ரணில்!

தனது ஒளிப்படங்களை 'கட் அவுட்கள்' மற்றும் சுவரொட்டிகளில் இனிமேல் காட்சிப்படுத்த வேண்டாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

நேற்று மட்டக்களப்பு - செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சுவரொட்டிகளில் தமது புகைப்படத்தை பொறிப்பதை அரசியல் தலைவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று கோரியுள்ள ஜனாதிபதி, கட் அவுட் மற்றும் அரசியல் கோஷங்களில் இருந்து விலகி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்குக் கூட்டாக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் என்று அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (எ-இ)

# இலங்கைக்கு வரவுள்ள வெளிநாட்டு அமைச்சர்கள்

கொழும்பு, ஒக். 9

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் 23ஆவது அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அதன் உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள், ஏனைய சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் எதிர்வரும் வாரத்தில் இலங்கை வரவுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் ஒன்றியத்தின் 23 ஆவது அமைச்சர்கள் மட்டக் கூட்டம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 11ஆம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ளது. (எ-இ)

## ஆசிரிய கலாசாலையில்

# கல்வியமைச்சர் பங்கேற்பில் நூற்றாண்டு நிறைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 9

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவு விழா நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிமுதல் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலை முதல்வர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த, சிறப்பு விருந்தினராகக் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் பங்கேற்கவுள்ளனர்.

நிகழ்வில் கலாசாலையின் நூற்றாண்டு சஞ்சிகையான கலைமலர் வெளியீடு, அஞ்சல் திணைக்களத்தின் இரு பத்தைந்து ரூபா முத்திரை வெளியீடு, முதல்நாள் அஞ்சல் உறை வெளியீடு, முன்னாள் முதல்வர்களின் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன.

அதேவேளை, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு நிறைவுவிழாவை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தின் பின்புறத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக ஆசிரியர் கலாசாலை வரை நடைபவனி முன்னெடுக்கப்படவுள்ளது. (ச-66)

## சீரற்ற காலநிலையால்

# 13 மாவட்டங்களில் இயல்புநிலை குலைவு

## 7 பேர் உயிரிழப்பு; 100க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்வு

கொழும்பு, ஒக். 9

நாட்டில் 13 மாவட்டங்களில் நிலவும் சீரற்ற காலநிலையால் இதுவரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். 23 பேர் காயம் அடைந்துள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற காலநிலையால் கம்பஹா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலேயே அதிகளவானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. மாத்தறை மாவட்டத்திலேயே வெள்ள அபாயம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

வெள்ளம், மண்சரிவு மற்றும் காற்றால் ஆறு வீடுகள் முழுமையாகவும் 722 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

மழை வீழ்ச்சி தொடர்ந்தால் நில்வல கங்கை பெருக்கெடுத்து, மேலும் சில பகுதிகளுக்குள் வெள்ளநீர் புகும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, சீரற்ற காலநிலையால் மாத்தறை மற்றும் காலி மாவட்டங்களில் உள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல்தரவை இன்மையால் களவாடப்படும் கால்நடைகள்!

## பண்ணையாளர்கள் கவலை

**முல்லைத்தீவு, ஒக். 9**

**முல்லைத்தீவு மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இல்லாததால், உணவுதேடி அலைந்து திரியும் கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று பண்ணையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

இது தொடர்பில் பண்ணையாளர்கள் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மவட்டத்தில் அதிகளவான கால்நடைகளைக் கொண்ட பிரதேசமாக குமுழமுனை பிரதேசம் காணப்படுகின்றது.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட காலம் தொடக்கம் சுமார் 11 ஆண்டுகளுக்கு மேலாக கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரவை இல்லாத நிலை தொடர்கின்றது. இந்தப் பகுதியில் மட்டும் சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கால்நடைகள் மேய்ச்சல் தரவை இல்லாமல் அல்லற்படுகின்றன.

இதுதொடர்பில் அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கைகளை முன்வைத்தும் எந்தத் தீர்வும் வழங்கப்படவில்லை. கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம், தண்ணிமுறிப்பு உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய இடத்தில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதி கால்நடைகளுக்காக அடையாளம் காணப்பட்டது. ஆனால், அந்தப் பகுதி இன்னமும் மேய்ச்சல் தரவைக்காக ஒப்படைக்கப்படவில்லை.

இந்தநிலை தொடருமானால், முல்லைத்தீவில் கால்நடை வளர்ப்பிலிருந்து பண்ணையாளர்கள் விலகிச் செல்வார்கள். இது நாட்டின் தேசிய கால்நடை உற்பத்தி மற்றும் பாலுற்பத்தி என்பவற்றிலும் செல்வாக்குச் செலுத்தும் - என்றனர். (ம-19)

## புலமைப்பரிசில் பரீட்சைக்கு மாணவர்களை அழைத்துவரும் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்!

யாழ்ப்பாணம், ஒக். 9

நாடளாவிய ரீதியில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு புலமைப்பரிசில் பரீட்சை இடம்பெறவுள்ள நிலையில், பரீட்சார்த்திகளை அழைத்துச் செல்லும் ஆசிரியர்களுக்கு சில அறிவுறுத்தல்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் இலங்கை பரீட்சைத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

புலமைப்பரிசில் பரீட்சையின் மேற்பார்வையாளர்களாகச் செயற்படும் ஆசிரியர்களின் பிள்ளைகள் எவராவது அவர்கள் மேற்பார்வையாளராகக் கடமையில் ஈடுபடும் பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுவாராயின், அவர்கள் கடமையில் இருந்து விலகிக்கொள்ளவேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் சகல பரீட்சார்த்திகளும் பாடசாலைக்கு வரவழைக்கப்பட்டு பொறுப்பு வழங்கப்பட்டுள்ள ஆசிரியர்களால் அங்கிருந்து உரிய பரீட்சை நிலையத்துக்கு நேரகாலத்துடன் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படவேண்டும்.

தாமதமாகிவரும் பரீட்சார்த்திகளை உரிய ஆசனங்களில் அமரச் செய்வதில் அவதானம் செலுத்தவேண்டும். ஒரேவிதமான பெயர்களைக் கொண்ட பரீட்சார்த்திகள் தொடர்பில் விசேட அவதானம் செலுத்துவதுடன் அவர்கள் உரிய ஆசனத்தில் அமர்ந்துள்ளார்களாவென உறுதிப்படுத்தவேண்டும்.

பரீட்சை நடைபெறும் வேளையில் பரீட்சை நிலையத்துக்குள் உள்நுழையாதிருத்தல் வேண்டும். **பரீட்சார்த்திகளை அழைத்துச் செல்லும் ஆசிரியர்கள் மேற்பார்வையாளரிடம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுப் பத்திரத்தைப் பெற்று சரியாகப் பூரணப்படுத்தி வரவுச் சான்றிதழுடன் இணைத்து மேற்பார்வையாளரிடம் மீண்டும் ஒப்படைத்தல் வேண்டும்- என்றுள்ளது. (ச-159)**

## அமெ. அதிகாரிகளுடன் சாகல கலந்துரையாடல்

கொழும்பு, ஒக். 9

தேசியப் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் சாகல ரத்நாயக்க அமெரிக்க பாதுகாப்பு உயரதிகாரிகளைச் சந்தித்து இருதரப்புப் பாதுகாப்பு உறவுகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளார்.

அந்தக் கலந்துரையாடல்களின் உள்ளடக்கத்தின் இரகசியத்தன்மை பாதுகாக்க இருதரப்பும் தீர்மானித்துள்ளது. கடந்த 22ஆம் திகதி அமெரிக்கா சென்றிருந்த தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை அங்கு தங்கியிருந்ததுடன் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பாதுகாப்பு அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பயணம் தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

வொஷிங்டனில் பேசப்பட்ட விடயங்களின் இரகசியத் தன்மையைத் தொடர்ந்தும் பாதுகாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை- அமெரிக்காவிலிருந்து நேரடியாக ஜேர்மனுக்குச் சென்ற பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பயணத்தில் இணைந்துகொண்டார். (எ-இ)

## சமூக நலத்திட்ட உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 9

**இணுவில் பொதுநூலகத்தின் கனடா அமைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் மருத்துவ, சமூக நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இணுவில் ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச-66)**



## புதினம் தெரியுமோ?

**நீதிபதிக்கு நீதி கேட்டு வைக்க இருந்த ஹர்த்தால் பின்னுக்குப் போகும்போல கிடக்கு. கொலர்ஷிப் எக்ஸாம் வாறதால அதுக்கிடையில ஹர்த்தாலை வைச்சால், சனம் கடுப்பாகும் எண்டதாலதான் இந்த முடிவாம். ஏற்கனவே இந்த விசயத்துக்காக மனிதச் சங்கிலிப் போராட்டத்தை அறிவிச்சும் அது பெரியளவில எடுபடேலை. மருதனார்மடத்தில இருந்து யாழ்ப்பாணம் வரைக்கும் றோட்டின்ர ரண்டு பக்கமும் சனம் கைகோர்த்து நிண்டு தங்கட எதிர்ப்பைத் தெரிவிச்சிருந்தால். உண்மையிலையே அதை எல்லா நாடுகளும் ஒருக்கா உத்துப்பார்த்திருக்கும். அரசாங்கத்துக்கும் 'பிறசர்' ஏறியிருக்கும். ஆனால் மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு அழைப்புவிட்ட கட்சியளின்ர சில எம்.பிக்கள் கூட அங்காலிப் பக்கம் எட்டியும் பாக்கேலை. இன்னொரு வயதான எம்.பி., றோட்டுக்கரையில் கதிரையைப் போட்டு இருந்துகொண்டு, மீடியாக்காரர் வரேக்க மட்டும் எழும்பி நிண்டு மற்றவையயின்ர கையைப் பிடிச்சுக் கொண்டு 'போஸ்' குடுத்தவர். இவையே இப்பிடி எண்டா, உந்தக் கொளுத்துற வெயிலுக்குள்ள சனம் எப்பிடிப் போகும்? முதலில வழிகாட்டுறவை சரியா நடக்க வேணும். அதைவிட்டிட்டு, அவையள் 'ஏஸிக்குள்ள' சொகுசா இருந்துகொண்டு சனமெல்லாம் றோட்டுக்கு இறங்கிப் போராடவேணுமெண்டு நினைக்கிறது நியாயமில்லை.**

**மனிதச் சங்கிலிப் போராட்டத்துக்கு பெரிசா சனம் வரேலையெண்டதால, நோகாமல் நொங்கு குடிக்கிற மாதிரி வேற என்ன போராட்டத்தை அறிவிக்கலாம் எண்டு எங்கட கட்சியள் யோசிச்சிருக்கினம். அதுக்குத்தானே இருக்கவே இருக்குது ஹர்த்தால். அப்பதான் ஹர்த்தாலை அறிவிச்சவை பேசாமல், றோட்டுக்கு இறங்காமல் பத்திரமா இருக்கலாம். கடையள் எல்லாத்தையும் பூட்டுவிச்சு, பஸ்ஸுகளையும் ஓடவிடாமல் செய்துபோட்டு 'ஹர்த்தால் வெற்றி' எண்டு அறிவிச்சு, அதில அரசியல் குளிர்காயிறதைத் தவிர எங்கட அரசியல்வாதிமார் களத்தில இறங்கிப் போராடுற ஆக்கள் இல்லை. அதுக்கு அவை சரிப்பட்டும் வராயினம். நீதிபதி சரவணராஜாவுக்கு நடந்தமாதிரி ஒரு சிங்கள நீதிபதிக்கு அரசாங்கம் வெருட்டி, அவர் நாட்டைவிட்டு ஓடிப் போயிருந்தால் இப்ப அங்காலிப் பக்கமெல்லாம் பதகளிப்பட்டுக்கொண்டுதானிருக்கும். எல்லா எதிர்க்கட்சிக்காரர்களும், சனங்களும் முழுநேரமா றோட்டில தான் நிண்டிருக்குங்கள். இன்னொரு அரகலய தொடங்கியிருக்கவும் கூடும். ஆனால் எங்கட அரசியல்வாதிமார் என்ன செய்யினம்? முன்பின் யோசிக்காமல் திடீரெண்டு மனிதச் சங்கிலிப் போராட்டத்தை அறிவிக்கினம். அது சரிவரேலை எண்டவுடன 'நிலையவித்துவான் மாதிரி' எப்பவும் பாவிக்கிற ஹர்த்தாலை கையில எடுக்கினம். ஆயுதப் போராட்டத்துக்கும், அகிம்சைப் போராட்டத்துக்கும் பேர் போன இனம், இப்ப ஹர்த்தாலை வைச்சு, ஏழைபாழையளின்ர வயித்தில அடிச்சு, அதில ஆதாயம் தேடப் பாக்கிறதெண்டது எவ்வளவு பெரிய அபத்தம்?**

**நீதிபதிக்காக போராடத்தான் வேணும். ஆனால் அதுக்கு எங்கட அரசியல் தலைமையளிட்ட சரியான திட்டம் இருக்கோணும். எப்பிடி இதை சர்வதேசத்திட்ட கொண்டு போய், இலங்கைக்கு அழுத்தம் குடுக்கலாம் எண்டு பாக்கோணும். ஹர்த்தாலை வைச்சால் அரசாங்கத்துக்கு ஒரு நட்டமுமில்லையே. எங்கட கடைக்காரருக்கும், பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கும், அண்டண்டைக்கு வேலைக்குப் போய் உழைச்சு வாழுற சனத்துக்கும் தானே கஷ்டம். போராட்டம் எண்டது பொருத்தமாயிருக்கோணும், சனத்துக்கு வருத்தமாயிருக்கக்கூடாது.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சந்நிதி ஆச்சிரமத்தால் சமூக நல உதவிகள்!




யாழ்ப்பாணம், ஒக். 9

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் கடந்த வாரத்தில் பல்வேறு உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா - கூமாங்குளம் பிரதேசத்தில் சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலையின் கட்டடப் பணிக்காக ஒரு இலட்சம் ரூபா நிதியும், முல்லைத்தீவு - கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் 3 குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளான கிணறு கட்டுமானப் பணிக்காக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதிப்பங்களிப்பும், வீட்டின் ஜன்னல்கள், கதவுகள் பொருத்துவதற்காக 60 ஆயிரம் ரூபாவும் மின் இணைப்புக்காக 52 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

அத்துடன் வவுனியா- நெடுங்கேணி பிரதேச மாணவர்களின் போக்குவரத்து நலன்கருதி ஆரம்பிக்கப்பட்டுள்ள வவுனியா வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பேருந்து கட்டணத்துக்கான இரு மாத நிதிச் செலவையும் சந்நிதியான் ஆச்சிரமம் ஏற்றது. (ச-27)





# வெள்ளவாய்க்கால் துப்புரவு: அஞ்சலகத்தினர் முன்மாதிரி

யாழ்ப்பாணம், ஒக். 9

உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கொக்குவில், குளப்பிட்டிவீதியிலுள்ள வெள்ளவாய்க்கால் கடந்த வியாழக்கிழமை கொக்குவில் அஞ்சலகத்தினரால் துப்புரவு செய்யப்பட்டது.

சிரமதானப் பணியில் கொக்குவில் அஞ்சலகத் தபாலதிபர், உதவித் தபாலதிபர்கள், ஊழியர்கள், கோண்டாவில் உப தபாலதிபர் மற்றும் ஊழியர்கள், கோண்டாவில் மேற்கு உப தபாலதிபர், தாவடி உப தபாலதிபர், கொக்குவில் மேற்கு உப தபாலதிபர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)



மானிப்பாய் மேற்கு 30 வீட்டுத் திட்டப் பகுதியில் சிரமதானமும் மரக்கன்றுகள் நடும் நிகழ்வும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-66)

# புலமைப் பரீட்சை கருத்தரங்கு இன்று

யாழ்ப்பாணம், ஒக். 9

குமரநகர் வெளிநாட்டு ஒன்றியம் நடத்தும் புலமைப்பரிசில் பரீட்சை இலவச கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கருத்தரங்கில் வளவாளர்களாக யாழ். மத்திய கல்லூரி ஆசிரியர் த.அசோக்குமார், சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஜெ.சபேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

# சிவபூமி ஆச்சிரமத்தில் அறநெறிச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக். 9

அறநெறிச் சொற்பொழிவும் கூட்டுப் பிரார்த்தனையும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை குப்பிழான் சிவபூமி ஞான ஆச்சிரமத்தில் நடைபெற்றன.

நிகழ்வில் குப்பிழான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவச்சிறார்கள் கலந்துகொண்டு கூட்டுப் பிரார்த்தனை மற்றும் வழிபாடுகளில் ஈடுபட்டனர். தொடர்ந்து ஆச்சிரமப் பொறுப்பாளர் எஸ்.சிறிதரன் சொற்பொழிவு நிகழ்த்தினார். (ச-66)



# பச்சிலைப்பள்ளி குளங்கள் சீரமைப்பு கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஒக். 9

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்திலுள்ள குளங்களைப் புனரமைப்பது தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலர் தலைமையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

முகமாலை, முகாவில், முல்லையடி, கச்சார்வெளி கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்ட குளங்களே கிறிசலிஸ் நிறுவனத்தால் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கலந்துரையாடலில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கிறிசலிஸ் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், கிராமமட்ட விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ச-9)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். உற்சாகம் பிறக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒப்பரேசன் அல் அக்ஷா:

# ஹமாஸ் போராளிகள் நேற்றும் தாக்குதல்!

**டெல்அவிவ், ஒக். 9**

**இஸ்ரேலின் பல்வேறு ஆயுதநிலைகளை இலக்குவைத்து ஹமாஸ் போராளிகள் முன்னெடுத்துள்ள 'ஒப்பிரேசன் அல் அக்ஷா' நடவடிக்கை இரண்டாம் நாளாக நேற்றும் தொடர்ந்தது. நேற்றையதினமும் சுமார் ஆயிரத்து 500 ஏவுகணைகள் ஹமாஸால் ஏவப்பட்டன.**

பலஸ்தீனத்திடம் இருந்து இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ள பகுதிகளை மீண்டும் கைப்பற்றி பலஸ்தீனத்துடன் இணைப்பதே ஹமாஸ் போராளிகளின் பிரதான இலக்காகவுள்ளது. மேற்குக்கரை மற்றும் காசா முனைப்பகுதியில் ஹமாஸ் போராளிகள் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். இந்த நிலையில் நேற்றுமுன்தினம் காலை ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலை நோக்கி மிகக்குறுகிய நேரத்துக்குள் 5 ஆயிரம் ஏவுகணைகளை வீசித் தாக்குதல் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து இஸ்ரேலின் மேற்குக்கரை எல்லையாலும், காசாமுனை எல்லையாலும் பல நூறு ஹமாஸ் போராளிகள் ஊடுருவினார்கள். இந்த நிலையில் நேற்றும் ஹமாஸ் போராளிகளின் தாக்குதல் தொடர்ந்தது.

இஸ்ரேலியப் படைகளுடன் நேருக்குநேரான துப்பாக்கிச் சூட்டில் ஹமாஸ் போராளிகள் தற்போது ஈடுபட்டு வருகின்றனர் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)



ஈரானியப் பெண்களுக்காக

## போராடும் நர்கீஸ் முகமதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு

தெஹ்ரான், ஒக். 9

ஈரானியப் பெண்கள் மீதான ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியதற்காகவும், மனித உரிமைகள் மற்றும் அனைவருக்கும் சுதந்திரத்தை மேம்படுத்த வலியுறுத்தி போராடியமைக்காகவும் சிறையில் அடைக்கப்பட்ட ஈரானைச் சேர்ந்த நர்கீஸ் முகமதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், அமைதி, இலக்கியம் என 6 துறைகளின் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்தவகையில் ஈரானில் பெண்களுக்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடி வருபவரான நர்கீஸ் முகமதிக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரை ஈரான் அரசு 13 முறை கைதுசெய்து ஐந்து முறை குற்றவாளியாகத் தீர்ப்பளித்தது. இறுதியாக 31 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 154 கசையடிகளும் அவருக்குத் தண்டனையாக வழங்கப்பட்டது. அவர் தற்போதும் ஈரானிய சிறையிலேயே அடைக்கப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## ஹமாஸின் பின்புலத்தில் ரஷ்யாவின் தலையீடா?

*அமெரிக்கா, இஸ்ரேல் கழுகுப்பார்வை*



தெஹ்ரான், ஒக். 8

ஹமாஸ் போராளிகளால் இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட எதிர்பாராத் தாக்குதலின் பின்னணியில் ரஷ்யா இருக்கலாம் என்று அமெரிக்காவும் இஸ்ரேலும் சந்தேகிக்கின்றன என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

உக்ரைன் - ரஷ்யா விவகாரத்தில் உக்ரைனுக்கான ஆயுத, பண உதவிகளை அமெரிக்கா தாராளமாகச் செய்து வருகின்றது. இந்தப் போர் ஆரம்பித்து சுமார் ஒன்றரை ஆண்டுகள் ஆகின்ற நிலையில் அமெரிக்காவின் உதவிகள்தான் உக்ரைனுக்கு இப்போது அரணாக உள்ளன.

இதுபோக, ஏவுகணைத் தடுப்பு அமைப்பில் உலகின் மேம்பட்ட நிலையை அடைந்துள்ள இஸ்ரேல், அந்தத் தொழில்நுட்பத்தை நேட்டோக் கூட்டணியின் பிறிதொரு நாட்டின் ஊடாக உக்ரைனுக்கு வழங்க அண்மைக்காலமாக முன்னெடுப்புகள் இடம்பெற்றன. இது ரஷ்யாவைக் கோபம்கொள்ளச் செய்திருக்கலாம். ரஷ்யாவுக்கு எதிரான இஸ்ரேலில் நடத்தைகளால்தான் ஹமாஸ் மூலமாக இஸ்ரேல் மீது ரஷ்யா ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளது என்று போரியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)



## பீரங்கிகளைக் கைவிட்டு இஸ்ரேலியப் படை ஓட்டம்

டெல்அவிவ், ஒக். 9

இஸ்ரேலுக்கு எதிராக ஹமாஸ் உள்ளிட்ட போராளிக் குழுக்கள் போர் அறிவிப்புச் செய்து இஸ்ரேலுக்குள் ஊடுருவியுள்ள நிலையில், இஸ்ரேலியப் படைகள் பீரங்கிகள் உள்ளிட்ட பலநூறு போர்த்தளபாடங்களைக் கைவிட்டுத் தப்பியோடியுள்ளன.

ஹமாஸ் போராளிகளாலும் பலஸ்தீனர்களாலும் இஸ்ரேலியப் படைகளின் போர்த்தளபாடங்கள் கைப்பற்றப்பட்டு வைக்கப்பட்டுள்ள ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

எனினும், இந்தப் பின்வாங்கல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்றும் பதில் தாக்குதல் நினைத்துப்பார்க்க முடியாத வகையில் இருக்கும் என்றும் இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது. (ம)

இஸ்ரேலின் போர்த்தந்திரி

## ஹமாஸால் கைது

டெல்அவிவ், ஒக். 9

இஸ்ரேலின் போர்த்தந்திரியும், ஹமாஸ் போராளிகளுக்கு எதிரான கொள்கைகளை வகுப்பவர்களில் ஒருவருமான நிம்ரோட் அலோனி ஹமாஸ் போராளிக் குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவருடன் இன்னும் சில இஸ்ரேலியர்களையும் ஹமாஸ் குழு பயணக்கைதிகளாகப் பிடித்துவைத்துள்ளது.

ஹமாஸ் போராளிகள் பலர் இஸ்ரேலியப் படைகளால் கைதுசெய்யப்பட்டு வருடக்கணக்காக சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள பின்னணியில், அவர்களை விடுவிப்பதற்காக பேரம் பேசுவதற்காகவே இவர்களை ஹமாஸ் குழு கைதுசெய்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (ம)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாக வடிவமைக்கப்பட்ட யானைவேலி முல்லையில்!



முல்லைத்தீவு, ஒக். 8

புதிதாக வடிவமைக்கப்பட்ட யானைவேலியொன்று முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, மன்னாங்கண்டல் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மன்னாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கே இந்த மின்வேலி அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் 10 இலட்சம் ரூபா செலவில் இந்த யானைப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. சுமார் இரண்டு கிலோமீற்றர் நீளம் கொண்டதாகவே இந்த யானை வேலி அமைத்துக்கொடுக்கப்பட்டுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காமினி சேனநாயக்கா மற்றும் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன், வவுனியா பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எஸ். ஜெயகாந்தன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர். (ம-19)

## யானைப்பிரச்சினை முல்லையில் உச்சம்!

### முல்லை. மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஒக். 8

முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கியமான பிரச்சினைகளில் ஒன்றாக யானைப் பிரச்சினை காணப்படுகின்றது என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னாங்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு கடந்த வெள்ளிக்கிழமை நவீனத்துவம் மிக்க யானைவேலி அமைத்துக்கொடுக்கப்பட்டது. நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்துடன் சம்மந்தப்பட்ட பிரச்சினையாக யானைப் பிரச்சினை காணப்படுகின்றது. அந்த வகையில் முல்லைத்தீவில் இவ்வாறான யானை வேலிகள் அமைத்துக்கொடுக்கப்படுவது பரவலாக்கப்பட வேண்டும். வவுனியா பல்கலைக்கழகம் பல நல்ல செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான தொடர் வழிகாட்டல்களை வவுனியா பல்கலைக்கழகம் தொடர்ந்து முன்னெடுக்கவேண்டும் - என்றார். (ம-19)

## கடற்றொழில் சமாசத்துக்கு நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.8

வடமராட்சி வடக்கு கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கான புதிய நிர்வாகத் தெரிவு கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

மாவட்ட கூட்டுறவு ஆணையாளரது ஏற்பாட்டில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.தயாளன் தலைமையில் வடமராட்சி வடக்கு சமாச கட்டடத்தில் இடம்பெற்ற புதிய நிர்வாகத் தெரிவுக் கூட்டத்தில் சமாசத்தின் மத்திய சபை உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

புதிய நிர்வாகத் தெரிவில் இரு தரப்பாக இழுபறிநிலை ஏற்பட்டதையடுத்து சமாசத்தின் நிர்வாகக் குழுவுக்காக 9 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் தலைமையில் நடைபெற்றது.

6 உறுப்பினர்களுக்கான தேர்வில் 9 பேர்போட்டியிட்டிருந்தனர். அளிக்கப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் கூடிய வாக்குகளைப் பெற்று மூவர் நேரடியாகத் தெரிவாகியிருந்த நிலையில் ஐவருக்கு சம எண்ணிக்கையிலான வாக்குகள் கிடைத்திருந்தன.

அதையடுத்து திருவுளச்சீட்டு முறையில் குறித்த ஐவரில் மூவர் தெரிவு செய்யப்பட்டனர்.

தம்பிராசா சந்திரதாஸ் தலைவராகவும், நாகராசா வர்ணகுலசிங்கம் உபதலைவராகவும், வைரமுத்து பரமானந்தராசா செயலாளராகவும், வனிதராசா வசந்தராஜ் பொருளாளராகவும், நிர்வாக உறுப்பினர்களாக மு.கந்தசாமி, அ.இரட்ணகுமார், சி.சிவப்பிரதீஸ் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (எ-110)




### ஊரிப்பிட்டி இந்து மயான

## பெயர்ப்பலகை திறப்பும் மரக்கன்று நடுகையும்

யாழ்ப்பாணம், ஒக். 8

சாவகச்சேரி மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்து மயான பெயர்ப்பலகை திரைநீக்கமும் மரக்கன்றுகள் நடுகை நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது.

மயான அபிவிருத்திச் சபையின் தலைவர் கா.சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபை செயலாளர் சந்திரகுமார், ஆசிரியர் சுதேஸ்வரன், கிராம அலுவலர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-9)

## மீனவர்களுக்கு வலை கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 8

மண்டோஸ் புயலால் பாதிக்கப்பட்ட 40 மீனவர்களுக்கு மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மெசிடோ நிறுவனத்தால் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இந்த வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர் முரளிதரன், மெசிடோ நிறுவனப் பணிப்பாளர் யாட்சன் மற்றும் மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-27)






## ஸ்ரீகணேசா முன்பள்ளி சிறுவர்தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 8

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் சிறுவர்தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முன்பள்ளித் தலைவர் இ.குணநாதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் முன்பள்ளிச் சிறார்களின் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து முன்பள்ளிச் சிறார்கள் அனைவருக்கும் கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ச-66)



## கட்டடம் திறப்பு

புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குப்பிழான் தெற்கு கிராமியச் செயலகத் திறப்பு விழா குப்பிழான் விவசாய சம்மேளனத் தலைவர் செ.நவரத்தினராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பகுதி நிகழ்வாக, குப்பிழானைச் சேர்ந்த புலம்பெயர் உறவுகளின் நிதிப் பங்களிப்பில் பொருளாதார நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 55 மாணவர்களுக்கான புத்தகப் பைகளும் வழங்கப்பட்டன. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஷோம்பி இலங்கையை அசைக்குமா?

இலங்கைக்குள் 'ஷோம்பி' போதைப்பொருள் ஊடுருவியுள்ளது என்று வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். நாட்டின் வீதிகளில் அவதானிக்கப்பட்ட ஒருசில அசாதாரணமான மனிதர்களை மையமாக வைத்து இந்த அபாயச் சங்கு ஊதப்பட்டிருக்கின்றது. எல்லாவற்றையும்விட, ஷோம்பிப் போதைப்பொருளின் தாக்கம் சமூக மட்டத்தில் அதிகமாக இருக்கலாம் என்றும் அது இன்னுமின்னும் ஆழமாக விரிவதற்குச் சாத்தியம் உள்ளது என்றும் துறைசார் அதிகாரிகள் வலுவாக எச்சரித்திருக்கின்றனர்.

ஹொலிவுட் திரைப்படங்களில் அதிகம் உச்சரிக்கப்படும் பெயர்களில் ஒன்றுதான் 'ஷோம்பி'. மனிதன் தன் இயல்பு நிலையை இழந்து – தன்னிலை தொடர்பில் எதுவுமே அறியாது ஒரு மிருகம்போல, இரத்தவெறியோடு அலைந்து திரியும் 'கற்பனைப் பாத்திரம்தான்' ஷோம்பி'. ஷோம்பிக்களின் முகம் மனித சுபாவத்தை இழக்கும், உடல் அழுகும், போதையே வாழ்வாகும். இப்படியான ஷோம்பிகள் யாரையெல்லாம் கடிக்கின்றனவோ அவர்களும் ஷோம்பிக்களாக மாறுவர். திரைப்படத்துக்கு அப்பால் நிஜவாழ்வில் ஷோம்பிக்கள் முதன்முதலாக அமெரிக்காவின் பிடடெல்பியாவில் அவதானிக்கப்பட்டனர். இதையடுத்து விரைந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் ஹெரொக்கெய்னை விடவும் 50 மடங்கு வீரியம் மிக்க போதைப்பொருளைப் பாவித்தமையால் தான் இவ்வாறு மனிதர்கள் மிருகங்களாக – ஷோம்பிக்களாக – மாறியுள்ளனர் என்று அமெரிக்கா பகிரங்கப்படுத்தியது.

இதற்கெதிரான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்னரே, அதாவது ஷோம்பிக்கள் அடையாளப்படுத்தப்பட்ட வெகுசில நாள்களிலேயே பிடடெல்பியாவின் எல்லைகளைக் கடந்து லொஷ்வெகாஸ், நியூயோர்க் நகர்களில் ஷோம்பிகள் அடையாளப்படுத்தப்பட்டனர். இப்போது ஆபிரிக்கா, பெரு, சிலி, மெக்ஸிக்கோ மற்றும் இலங்கை என்று எங்கும் ஷோம்பிக்கள் பல்கிப் பெருகியுள்ளனர். இதன் அர்த்தம் ஹெரொக்கெய்னை விடவும் பல மடங்கு வீரியம் மிக்க 'ஷோம்பி' போதைப்பொருள் உலகில் மிகவிரைவாக சமூக மயப்பட்டு வருகின்றது என்பதே.

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட நாடு என்பதைவிட, இப்போது நாலா பக்கமும் விதம் விதமான போதைப்பொருளால் சூழப்பட்ட நாடாகவே இலங்கை மாறிவருகின்றது. முன்னொரு காலத்தில் காண்பதற்கு அரிதாக இருந்த கஞ்சா இன்று அரசின் கடன் வருவாயை அடைக்கும் வர்த்தகப் பயிராக மாறும் அளவுக்கு போதைப்பொருள் இலங்கையில் சர்வசாதாரணமாக மாறிவிட்டது. ஐஸ், ஹெரோய்ன், ஹொக்கெய்ன் என்று உயிர்கொல்லிப் போதைப்பொருள்களின் பாவனையும் கடத்தல்களும் கொஞ்சநஞ்சமல்ல. பாடசாலைச் சிறார்கள் முதல் யுவதிகள் வரை போதைப்பொருள் கையாடல் தற்காலத்தில் தாராளம்தான். இதற்கெதிராக எத்தனையோ தடுப்புச் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும் போதைப்பொருள்களின் ஊடுருவலை இல்லாமற் செய்ய அரசாங்கத்தால் இயலவில்லை. இதனை இன்னும் மோசமாக்கும் வகையில் இப்போது 'ஷோம்பி' போதைப்பொருளின் ஊடுருவல் ஆகப்பெரும் அபாய ஒலியையே எழுப்பியிருக்கின்றது.

இலங்கைக்குள் போதைப்பொருள் ஊடுருவலைத் தடுப்பதில் அரச இயந்திரம் தோல்வியையே கண்டுள்ளது. ஒரு கிலோ ஹெரோய்னால் வரும் வருவாயை 100 கிராமுக்கும் குறைவான ஷோம்பி போதைப்பொருள், போதைக்கடத்தல் மாபியாவுக்குக் கொடுக்கும். இவ்வாறிருக்கையில், இந்த மாபியாக்களின் முதன்மைத் தெரிவாக இனி ஷோம்பி போதை இருக்கப்போகின்றது. அளவில் பெரிதான ஹெரோய்ன், கஞ்சா கடத்தல்களையே கோட்டைவிடும் பாதுகாப்புத் தரப்பு எவ்வாறு ஷோம்பி போதையைக் கையாளும்? அதன் கடத்தலை முறியடிக்கும்?

## நாளொரு நல்வார்த்தை

நூலகம் இல்லாத ஒரு ஊரை நான் ஒரு ஊராகவே மதிப்பது இல்லை..!

– லெனின் –




## சுற்றுலாப் படகின் இயந்திரம் திருட்டு

சாட்டி கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் படகு ஒன்றின் இயந்திரம் நேற்றுமுன்தினம் இரவு களவாடப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடற்கரையோரமாக உல்லாசப் பயணிகளை ஏற்றிச்செல்வதற்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகின் இயந்திரமே திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# ஆட்சியைத் தக்கவைக்க அரசாங்கம் புதிய பொறி

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஒக். 9**

**தற்போதைய ஆட்சியை 2025ஆம் ஆண்டு வரை தக்கவைக்க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான சூழ்ச்சி இடம்பெறுகின்றது என்று ஜே.வி.பி. சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்ததாவது:-

2024 ஒக்ரோபருக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும். அப்படியாயின் ஓகஸ்ட் மாதம் வேட்புமனு ஏற்கப்படவேண்டும். இந்த அரசின் ஆயுள் அடுத்தமாதம் ஓகஸ்ட் வரையே. ஏனெனில் ஜனாதிபதித் தேர்தல் பெறுபேறு வந்த பிறகு. மறுநாள் நாடாளுமன்றமும் கலைக்கப்படும். நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் 2025 ஒக்ரோபர் மாதம்வரை உள்ளது.

அந்தவகையில் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதத்துடன் வீடு செல்வதைத் தடுப்பதற்காக, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்கிவிட்டு 2025 ஒக்ரோபர் வரை ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள இந்த அரசு முயற்சிக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது சிறந்ததாயினும் அவ்வாறு நீக்கப்பட்டால் இந்த அரசின் ஆயுள் ஒருவருடம் நீடிக்கும், ஆட்சியைத் தக்கவைக்கும் பொறியே இதுவோகும். அதற்கு இடமளிக்கக்கூடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கும் நாளிலேயே, நாடாளுமன்றம் கலைக்கப்படவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் ஆணையுடன் அமையும் புதிய நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரம் செல்லும் – என்றார். (ச-44)

## ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவன் பாக்கு நீரிணையை நீந்திச் சாதனை



ஓட்டிசத்தால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன், தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடி வரையிலான பாக் ஜல சந்திக் கடலை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். சென்னையைச் சேர்ந்த ஹரேஷ் என்ற சிறுவனே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை காலை மன்னாரை வந்தடைந்த அவர், தலைமன்னாரில் இருந்து வெள்ளிக்கிழமை இரவு தன்னுடைய பயணத்தை ஆரம்பித்து பாக்கு நீரிணையை வெற்றிகரமாக நீந்திக்கடந்தார். அரிச்சல்முனை வந்தடைந்த ஹரேஷ் பரதை அவரது தாய் உட்பட பலரும் கண்ணீர் மல்க முத்தமிட்டு வரவேற்றனர். (ம-27)

**நாளை**
10.10.2023
செவ்வாய்க்கிழமை
புரட்டாதி 23

| | |
|---|---|
| சுபநேரம் | : 10.32 – 12.02 |
| ராகுகாலம் | : 03.02 – 04.32 |

ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




உலகக்கிண்ணத் தொடரை நோக்கி ஒவ்வொரு அணிகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு அணிக்கும் இந்தக் கிண்ணம் மிக முக்கியமானது. ஆனால், உலகக்கிண்ணத்தை இதுவரை ஒருதடவையேனும் தென்னாபிரிக்கா ஏந்தவில்லை. அணி அசுரப் பலமாக இருந்தாலும் ஓய்வறையில் இருக்கும் பாகுபாடுகள், பிரச்சினைகளைத் தீர்க்க - பிரச்சினைகள் மற்றும் மனக்கிலேசங்கள் வராமல் பாதுகாக்கவென சிறப்புக் குழுவொன்றை விசேட இணைப்பாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்குள் புகுத்தியுள்ளதாம் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபை.

குயிண்டன் டி ஹொக் வெள்ளை மனோநிலையில் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டுகள் கடந்த மூன்று மாதங்களின் முன்னர் பூதாகரமாக முன்வைக்கப்பட்ட நிலையில், இந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து வைத்து ஓய்வறைக்குள் சுமுக நிலையைப் பேண உதவிய முக்கியமான புள்ளிகளே இந்த விசேட குழுவில் இடம்பிடித்துள்ளனர்.

இதைவிட 'மென்ரர்' என்ற நிலையில் இருந்து செயற்படுவதற்காக டேல் ஸ்ரெய்னையும் நாடியுள்ளதாம் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை. சுருக்கமாகச் சொல்லவேண்டுமாயின் குயின்டன், வான் டெர் டசன், மார்க்ரம், பவுமா, மில்லர் என்று இப்படியான அணியை வைத்து இப்போது கிண்ணம் வெல்லாவிடின் இனி, எப்போதும் இல்லை என்பதில் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உறுதியாக இருக்கின்றதாம்.



சேப்பாக்கத்தில
இந்தியா தோத்திருந்தா
கீழ்பாக்கத்திலயும்
இடம் இருந்திருக்காது
கண்டியளோ

## கோலி, ராகுல் நிதானம்

# சரிவிலிருந்து அபாரமாக மீண்டு ஆஸியை வீழ்த்தியது இந்தியா



புதுடில்லி, ஒக். 9

உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், பெரும் சரிவில் இருந்து மீண்டு அவுஸ்திரேலிய அணியை வீழ்த்தியது இந்தியா. ஜடேஜாவின் சுழலும், கோலி, ராகுலின் நிதானமான ஆட்டமும் இந்திய அணியின் வெற்றிக்குப் பங்களித்தன.

**ஆஸியின் இன்னிங்ஸ்**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர் மார்ஷ் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். வோர்ணர், சிமித் இருவரும் இணைந்து அவுஸ்திரேலியாவைச் சரிவில் இருந்து மீட்டனர். அனுபவ வீரர்களான அவர்களின் ஆட்டத்தில் அவுஸ்திரேலியா தலை நிமிர்ந்தது. 41 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் வோர்ணரை வெளியேற்றினார் குர்தீப் யாதவ். அதன் பின்னர்தான் பந்துவீச அழைக்கப்பட்டார் ஜடேஜா. சிமித்தால் கொஞ்சமும் கணிக்க முடியாத பந்தில் அவரை ஆட்டமிழக்கச் செய்தார் ஜடேஜா. ஜடேஜாவின் துல்லியம் தொடர்ந்தது லபுஷேன் 15 ஓட்டங்களுடனும், அலெக்ஸ் கேரி ஓட்டமெதையும் பெறாதும் ஜடேஜாவால் வெளியேற்றப்பட்டனர். 15 ஓட்டங்களுடன் மக்ஸ்வெலை வெளியேற்றினார் குல்தீப் யாதவ். பின்வரிசை வீரரான ஸ்ராக் 28 ஓட்டங்களைப் சேர்த்தார். முடிவில் 199 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது அவுஸ்திரேலியா.

பந்துவீச்சில் ஜடேஜா 3 இலக்குகளையும், குல்தீப் யாதவ், பும்ரா இருவரும் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

**இந்தியாவின் இன்னிங்ஸ்**

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி எவ்வளவு மோசமான ஆரம்பத்தைக் காணமுடியுமோ அவ்வளவு மோசமான ஆரம்பத்தைக் கண்டது. ஆரம்ப வீரர்களான ரோகித் மற்றும் இசான் கிஷான் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தனர். நான்காம் நிலை வீரரான ஸ்ரேயாஸும் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழக்க 2 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்தது இந்தியா. கோலியுடன் இணைந்தார் ராகுல். இருவரும் மிகமிக நேர்த்தியான ஆட்டம். ஒருவரை இன்னொருவர் விஞ்சும் அளவுக்கு, நிறைவாகப் பாராட்டும்படியாக அவர்களின் இணைப்பாட்டம் இருந்தது. பிறிதொரு இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களை எட்டியது இந்தியா. அணி 167 ஓட்டங்களைப் பெற்று வெற்றி ஏறக்குறைய உறுதிசெய்யப்பட்ட நிலையில் 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோலி. களமிறங்கினார் பாண்டியா. மறுமுனையில் ராகுலின் நிதானம் தொடர 52 பந்துகள் மீதமிருக்க 6 இலக்குகளால் வென்றது இந்தியா. ராகுல் 97 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

## வில்லியம்சன் நலம்

உலகக்கிண்ணத் தொடரில் இன்று நடைபெறும் நெதர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில், நியூஸிலாந்து அணியின் வில்லியம்சன் விளையாடுவார் என்று தெரியவருகின்றது. காயம் காரணமாக இங்கிலாந்துக்கு எதிரான ஆட்டத்தில் வில்லியம்சன் விளையாடவில்லை. தற்போது அவர் நலம் பெற்றுள்ளதால் இன்றைய ஆட்டத்தில் அவர் களமிறங்கத் தகுதியுடன் உள்ளார். எனினும், ஒப்பீட்டளவில் பலவீனமான நெதர்லாந்துக்கு எதிராக அவருக்கு ஓய்வு கொடுத்த அடுத்த ஆட்டத்தில் அவரை விளையாட வைக்கவும் நியூஸிலாந்து திட்டமிட்டிருக்க வாய்ப்புக்கள் இருக்கவே செய்கின்றன. (ம)



# மார்க்ரத்தின் ஆட்டத்தை எதிர்பார்க்கவே இல்லை!

## பவுமா வெளிப்படைப்பேச்சு

உலகக்கிண்ணத் தொடரில் இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் 49 பந்துகளில் சதம் கடந்து உலக சாதனை படைத்த எய்டன் மார்க்ரத்தின் ஆட்டத்தை எதிர்பார்க்கவில்லை என்று தென்னாபிரிக்க அ[illegible]துள்ளார்.

பவுமா மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் எமது துடுப்பாட்ட வீரர்கள் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். குயின்டன் டி ஹொக் மற்றும் வான் டெர் டசனிடமிருந்து இவ்வா[illegible] ஆட்டத்தை அன்றையதினம் எதிர்பார்த்தபோதிலும் எய்டன் மார்க்ரம் சதம் காண்பார என்று நினைத்துப்பார்க்கவில்லை.

ஏனெனில் எய்டன் களமிறங்கும் போது 19 ஓவர்களே மீதமிருந்தன. ஆனால் அவர் அனைவரையும் வியப்பில் ஆழ்த்திவிட்டார் - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராவிட், சச்சினின் கலவை நான்!

ராகுல் ராவிட், சச்சின் கலந்த கலவை நான் என்று நியூஸிலாந்து அணியின் இளம் வீரர் ரச்சின் ரவீந்திரா தெரிவித்துள்ளார். இந்தியாவைப் பூர்வீக இடமாகக் கொண்ட ரச்சின் ரவீந்திரா தனது பெயர் வரக்காரணமான சம்பவத்தை ஊடகங்களுக்கு முன்பாகப் பகிரங்கப்படுத்தியுள்ளார். தமிழரான அவர், தனது தந்தை ரவி கிருஷ்ணமூர்த்தி ஒரு கிரிக்கெட் பிரியர் என்றும், ராவிட் மற்றும் சச்சினின் ரசிகரான அவர் தனக்கு ரச்சின் ரவீந்திரா என்று பெயர் சூட்டினார் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## தினம் ஒரு பரிசு — நாள் 3 இன் வெற்றியாளர்கள்

| | |
|---|---|
| ச.மதியுகன் | - கொடிகாமம் |
| சி.கபில்தேவ் | - சங்கத்தானை |
| பு.துசானி | - தெல்லிப்பழை |
| ர.கவின் | - காரைநகர் |
| சி.சாய்மித்திரா | - மணியம்தோட்டம் |
| செ.மிதுலா | - நல்லூர் |
| ஒ.மேரி தொம்ஷியா | - பருத்தித்துறை |
| ப.தனுயன் | - கைதடி |
| எம்.சேந்தன் | - கொக்குவில் |
| கோ.மால்மருகன் | - ஊரெழு |
| அ.விதுர்சன் | - கள்ளப்பாடு |
| கி.கிங்ஸ்ரன் ஜெரி | - வட்டுக்கோட்டை |
| எம்.தேனுஜா | - மூளாய் |
| எல்.மார்க்கண்டு | - வல்வெட்டித்துறை |
| சி.கீர்த்தனன் | - சின்னமடு |



## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 4**

நெதர்லாந்து - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (09.10.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?

விடை : ....................................................

பெயர் : ....................................
முகவரி : ....................................
....................................
தே.அ.இல : ....................................
தொ.இலக்கம் : ....................................

**மெகா பரிசு**

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?

விடை : ....................................

2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?

பெயர் : ....................................
முகவரி : ....................................
....................................
தே.அ.இல : ....................................
தொ.இலக்கம் : ....................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக (தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.



# ரஷீத்கானுக்கு உபாதை

ஆப்கானிஸ்தான் அணியின் நட்சத்திரப் பந்துவீச்சாளரும் அதிரடி வீரருமான ரஷீத்கானுக்கு உபாதை ஏற்பட்டுள்ளது என்று முதற்கட்டத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

பங்களாதேஷுக்கு எதிரான நேற்றுமுன்தின ஆட்டத்தில் பந்துவீசும்போது ரஷீத்கானுக்கு வலி உணரப்பட்டுள்ளது. இதையடுத்து அவர் சிறப்பு மருத்துவக் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். ரஷீத்கானின் உபாதை தொடர்பில் நாளை காலை முதல்கட்ட அறிக்கையும், புதன்கிழமை காலை அடுத்த ஆட்டத்தில் அவர் விளையாடக்கூடிய நிலையில் உள்ளாரா? என்பது தொடர்பான இரண்டாம் கட்ட அறிக்கையும் கோரப்பட்டுள்ளது. நாளைமறுதினம் வெளியாகும் இரண்டாம்கட்ட அறிக்கையைப் பொறுத்தே இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ரசிஷீத்கான் விளையாடுவாரா? இல்லையா? என்பது உறுதியாகும். (ம)



# இன்றைய ஆட்டம் ஓர் அலசல்

உலகக்கிண்ணத் தொடரில் நியூஸிலாந்து மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. இந்த இரண்டு அணிகளும் இதற்கு முன்னர் தலா ஒவ்வொரு ஆட்டத்தில் விளையாடியுள்ளன. நெதர்லாந்து அணி பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் அடைந்த தோல்வியுடன் இன்றைய ஆட்டத்தை எதிர்கொள்கின்றது. இன்று நியூஸிலாந்து அணி நெதர்லாந்துக்குச் சிம்மசொப்பனமாகவே இருக்கும். ஏனெனில் அசுர பலம்மிக்க இங்கிலாந்துக்கே அசால்டாகச் சம்பவம் செய்துவிட்டு இன்றைய ஆட்டத்துக்குள் கால்பதித்துள்ளது நியூஸிலாந்து.

ஆரம்ப வீரர் கொன்வே தொடர்ச்சியாக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றார். சராசரியில் தொய்வில்லாமல் ஆடும் வகையில் அவர் தன் ஆட்டத்தை மேம்படுத்தியும் வைத்துள்ளார். மூன்றாம் நிலை இடத்தில் ரிச்சன் ரவீந்திரா களமிறங்குகிறார். இளம் வீரரான அவருக்குத் தெரிந்ததெல்லாம் அதிரடி மட்டுமே. வில்லியம்சன், லாதம் இருவரும் மத்திய வரிசையில் அணியின் சமநிலையைப் பேணுவதற்குத் தயாராக உள்ளனர்.

பந்துவீச்சில் போல்ட் அனுபவ முதிர்ச்சியுடன் அணியை முன்னின்று வழிநடத்துகின்றார். சான்நெர் சுழற்பந்து வீச்சில் வித்தை காட்டுகின்றார். இந்திய ஆடுகளங்களின் புரிதல்தன்மை சாட்நருக்கு இருப்பதால் பந்து வீச்சிலும் நியூஸிலாந்து பதறவே வைக்கும்.

நெர்லாந்து அணியைப் பொறுத்தவரை, அந்த அணி கத்துக்குட்டியாக இருந்தாலும் எப்போதும் அதிர்ச்சிவைத்தியம் கொடுக்கும் அணியாகவே உலகக்கிண்ண வரலாற்றில் இருந்து வந்திருக்கின்றது. இப்போதும்கூட முன்னொரு காலத்தில் ஒருநாள் கிரிக்கெட்டைக் கட்டியாண்ட மேற்கிந்தியத் தீவுகளை 'போட்டுத்தள்ளிவிட்டே' அந்த இடத்துக்கு வந்திருக்கின்றது.

விக்ரம்சிங், ஸ்கொட் எட்வாட், பஸ் டி லீட், லொகன் வாங் பீக் நால்வரும் முக்கியமான துருப்புச்சீட்டுக்கள். இன்னும் சொல்லப்போனால் இவர்களிடமே நெதர்லாந்தின் வெற்றிதோல்வி தங்கியிருக்கின்றது.

## இன்றைய ஆட்டம்

நெதர்லாந்து — நியூஸிலாந்து

இடம் : ஹைதராபாத்
நேரம் : பி.ப. 2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண மாவட்ட இளம் சட்டத்தரணிகளின் ஏற்பாட்டில், வடமாகாணத்தில் ஜனாதிபதி சட்டத்தரணியாக முதலாவதாக நியமனம் பெற்ற செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் 45 ஆவது நினைவேந்தல் யாழிலுள்ள தனியார் விடுதியில் சிரேஷ்ட சட்டத்தரணி கு.குருபரன் தலைமையில் நடைபெற்றது. (ய-27)



# முள்ளியவளையில் சிறுவர் நிகழ்வுகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முள்ளியவளை கிழக்குப் பகுதியிலுள்ள காட்டா விநாயகர் 'சி.க.கூ.' முன்பள்ளியில் சிறுவர்தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் முன்பள்ளிச் சிறுவர்கள், ஆசிரியர்களுக்கு மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து வித்தியா தீபம் கல்வி மற்றும் தற்சார்பு பொருளாதார மேம்பாட்டு அமைப்பின் உதவியுடன் அன்பளிப்பு பொருள்களும் வழங்கப்பட்டன.

மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் நிகழ்வில் பங்கேற்றனர். (ச-19)



மிருசுவில் - விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் கடந்த ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் உயர்புள்ளி பெற்ற மாணவனை ஊக்குவிக்கும்முகமாக கனடாவில் வசித்து வரும் சங்கத்தானையைச் சேர்ந்த சிவவடிவேல் ஜெகரூபனால் துவிச்சக்கரவண்டி வழங்கி வைக்கப்பட்டது. (ய-9)



பளை, புலோப்பளை றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு அபேலங்கா நிறுவனத்தால் வடிகட்டிய சுத்தமான குடிதண்ணீர் உபகரணத்தொகுதி பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது. (ய-9)



வவுனியா கல்வி வலயத்துக்குட்பட்ட கந்தபுரம் வாணி வித்தியாலய பாடசாலை மாணவர்களுக்கு இணைந்த கரங்கள் அமைப்பால் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ய -27)



கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயத்தின் ஆசிரியர்தின நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிபர் ஐ.தேவஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச-159)

ஊர்காவற்றுறை பிரதேசசபையின் அனலைதீவு பொதுநூலகத்தினரின் தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது 'வாசிப்போருக்கு உலகம் சொந்தமானது' எனும் தொனிப்பொருளில் மாணவர்களிடையே பல்துறைப் போட்டிகள் நடத்தப்பட்டன. (ச-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீர்வேலி தெற்கு சுப்பிரமணிய சனசமூக நிலையத்தினரால், நீர்வேலியிலுள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் தரம் 5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சைக்கான கருத்தரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது. (ச-17)



நீர்விளையாட்டுப் பயிற்சிகளில் திறம்பட செயற்பட்ட போட்டியாளர்கள் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.
இலங்கை நீர்விளையாட்டு சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், பொலிஸ் அலுவலர்கள் அடங்கலாக சுமார் 342 பேர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (ச-113)



இணுவில் பொதுநூலக சிறுவர்திறன் விருத்திமைய சிறுவர்தின நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பொதுநூலக சிறுவர்திறன் விருத்திமைய மண்டபத்தில் பொதுநூலகத் தலைவர் மனோகரன் கஜந்தரூபன் தலைமையில் நடைபெற்றது. (எ-66)



தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கட்டைவேலிப் பொதுநூலகத்தில் புத்தகக் கண்காட்சியொன்று வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேசசபையின் செயலாளர் கம்ஸநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. (ச-66)



வரணி மத்திய கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள், கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரியின் பிரதான மண்டபத்தில் பழைய மாணவரும் தென்மராட்சி கல்விவலய ஆசிரிய ஆலோசகருமான வே.உதயகுமார் தலைமையில் இடம்பெற்றன. (ச-159)



உறவுப் பாலத்தின் நல்லிணக்க மேம்பாட்டை வலுப்படுத்தும்முகமாக மாத்தறை மாவட்டத்திலிருந்து வந்தவர்கள் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்துக்கும் அண்மையில் சென்றிருந்தனர். (எ-100)



யாழ்ப்பாணம், ஒக். 09
சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு முன்பிள்ளைப் பருவப் பிள்ளைகளின் பெற்றோருக்கான விழிப்புணர்வு நிகழ்வு சாவற்கட்டு கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.
சண்டிலிப்பாய் பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் 'வீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்பிள்ளைப்பருவப் அபிவிருத்தி' எனும் தொனிப் பொருளில் இந்த விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ச-66)



முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் விவசாயத் தொழிலை நம்பி வாழும் தெரிவுசெய்யப்பட்ட 34 குடும்பங்களுக்கு 'வன்னியின் கண்ணீர்' அமைப்பால் விதைகள் வழங்கப்பட்டன. கிராம அலுவலரின் பரிந்துரைக்கு அமைய நெல், உளுந்து, கச்சான் உள்ளிட்ட விதைகளே இவ்வாறு வழங்கப்பட்டன. (ச-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தென்மராட்சிப் பாடசாலைகளில்

# ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்களின் கல்வி பாதிப்பு

### பெற்றோர் கவலை

யாழ்ப்பாணம், ஒக். 9

**தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இடைநிலை, உயர்தர வகுப்புகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுகிறது என்று பெற்றோர் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.**

இதுதொடர்பில் அவர்கள் கூறியதாவது:-

இங்குள்ள பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்ட போதிலும் அந்த வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை. ஆங்கிலம், விஞ்ஞானம், உடற்கல்வி மற்றும் தொழில்நுட்பம் உள்ளிட்ட பாடங்களுக்கு உரிய ஆசிரியர்கள் இல்லை.

கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சில ஆசிரியர்கள் வாரத்தில் மூன்று தினங்கள் ஒரு பாடசாலையிலும் இரு தினங்கள் வேறு பாடசாலையிலும் கற்பிக்கின்றனர்.

இதனால் பாடத்திட்டத்தை முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியாமல் க.பொ.த. சாதாரண தரம் மற்றும் உயர்தரப்பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அத்துடன் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்படுவதுடன் கற்றலிலும் பின்னடைவு ஏற்படுகிறது.

எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை உடன் நிரப்பவேண்டும் - என்றனர். (ச-9)



## தன்னிறைவு உற்பத்திகள்: கிளிநொச்சியில் வயல்விழா

கிளிநொச்சி, ஒக். 9

கிளிநொச்சி விவசாயப் பயிற்சி நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட விவசாயச் செய்கையின் வயல் விழா 'சவால்களுக்கு மத்தியில் தன்னிறைவான உணவு உற்பத்தியை நோக்கி' எனும் தொனிப் பொருளில் கடந்த வியாழக்கிழமை வட்டக்கச்சி மாதிரி விவசாயப் பண்ணையில் சிறப்புற இடம் பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.ஜெயதீஸ்வரி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் மற்றும் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஆரோக்கியவாழ்வுக்கானவீட்டுத்தோட்டம், வறட்சி முகாமைத்துவத்தினூடான உப உணவுப் பயிர்ச்செய்கை, சேதனப் பசளை, வினைத்திறனான பயிர்ச்செய்கைக்கு பண்ணை இயந்திரங்களின் பயன்பாடுகள், காளான் வளர்ப்பும் பெறுமதிசேர் உற்பத்திகளும், வர்த்தக ரீதியிலான மஞ்சள் செய்கை, இயற்கை முறையில் மரக்கறிகளை சேமித்தல், பாரம்பரிய இலைமரக்கறிகளை அறிதல், கால்நடை வளர்ப்பும் ஒருங்கிணைந்த பயிர்ச்செய்கையும் முதலானவை தொழில்நுட்ப முறையில் காட்சிப்படுத்தப் பட்டு விளக்கமளிக்கப்பட்டது. (ச-113)

## ஆழிப்பேரலை இடர் தற்காப்பு முன்னாயத்த வேலைத்திட்டம்

### யாழில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 9

சுனாமி முன்னெச்சரிக்கை நிலையை மேம்படுத்துவதற்கான வருடாந்த சுனாமி இடர் ஒத்திகை வேலைத் திட்டம் இலங்கையின் கரையோர மாவட்டங்களில் இடம்பெற்று வருகின்றது.

இடர் முகாமைத்துவ நிலையம் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.

அதன் ஒரு செயற்பாடாக யாழ்.மாவட்டத்தில் 'ஆழிப் பேரலை முன்னாயத்தமும், சவால்களும்' எனும் தலைப்பிலான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தலைமையில் நடைபெற்றது.

கலந்துரையாடலில் இலங்கையின் இட அமைவு, அதன் முக்கியத்துவம், இயற்கை இடர் தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய முன்னாயத்தத் தயார் நிலை, ஆழிப்பேரலை இடர்களின் பாதிப்புகள், முன்னாயத்த நடவடிக்கைகள் என்பன தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ச-66)




### 12 மொழிகளில் திருமுறைகள்

## மறவன்புலவு சச்சிக்கு இந்தியா கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

திருமுறைகளை பன்னிரு மொழிகளில் உலகெங்கும் பரவச் செய்த இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

இந்த நிகழ்வு தமிழக ஆளுநர் ரவி தலைமையில் கடந்த சனிக்கிழமை இந்தியாவில் இடம்பெற்றது.

தமிழ், சிங்களம், இந்தி, சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், அசாம், மலாய், பர்மா, ஜேர்மனி மற்றும் ஆங்கில மொழிகளில் திருமுறைகளைத் திறம்பட மொழிபெயர்த்து இணையத்தளங்களில் பதிவேற்றம் செய்தமைக்கே அவர் கௌரவிக் கப்பட்டார். (ச-27)

## மாவட்டச் செயலரின்றி மன்னார் மாவட்டம்!

### உடன் நியமனம் வழங்குக ஜனாதிபதிக்குக் கடிதம்

மன்னார், ஒக். 9

மன்னார் மாவட்டத்தில் மாவட்டச் செயலர் பதவி ஒரு மாதத்துக்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்படுவதால் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வின்றி வேலைத்திட்டங்கள் தாமதமடைந்துள்ளன. இந்த வெற்றிடத்துக்குத் தகுதியுள்ள ஒருவரை விரைந்து நியமியுங்கள் - இவ்வாறு மன்னார் மாவட்ட பொது அமைப்புகளால் ஜனாதிபதிக்கு கடந்த புதன்கிழமை கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவிக்கையில்;

மன்னார் மாவட்டச் செயலர் பதவி ஒரு மாதத்துக்கும் மேலாக வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

இதனால் மன்னார் மாவட்டத்தில் பல்வேறு விதமான பிரச்சினைகள் தீர்க்கப்படாத நிலுவையிலுள்ளன.

குறிப்பாக வருடந்தோறும் மேற்கொள்ளப்படும் பெரும்போக விவசாய நடவடிக்கைகள், அபிவிருத்திப் பணிகள், ஆளணிப் பற்றாக்குறைகள் உள்ளிட்ட பல விடயங்களில் தாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே இந்த வெற்றிடத்துக்கு ஆளுமையுள்ள செயல்திறனுள்ள ஒருவரை விரைந்து நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (ச-60)

## கொடுப்பனவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக். 9

தென்மராட்சிப் பிரதேச பொதுசன மாதாந்த உதவித் தொகையைப் பெறுவோருக்கான ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவுகள் கடந்த வியாழக்கிழமை தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் விநியோகிக் கப்படுகின்றன.

தென்மராட்சிப் பிரதேச சமூகசேவைகள் அலகினரால் கொடுப்பனவுக்கான பட்டியல் அனுப்பிவைக் கப்பட்டதையடுத்து இந்தக் கொடுப்பனவு விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ச-9)



## கர்நாடக சங்கீதப் போட்டி - வரணி மத்திக்கு 2 இடங்கள்!



யாழ்ப்பாணம், ஒக். 9

அகில இலங்கை கர்நாடக சங்கீதப் போட்டியில் வரணி மத்திய கல்லூரி முதலாம் இடத்தையும் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகள் பூநகரி மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றன.

கர்நாடக சங்கீதப் போட்டியில் தரம் - 12, 13 பிரிவில், வரணி மத்திய கல்லூரி மாணவன் ரவிச்சந்திரன் கோபிசாந் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவானார். தரம்- 9,10,11 பிரிவில் கோணேஸ்வரன் சிறீரம்மியா மூன்றாம் இடத்தைப் பெற்றார். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனா மருத்துவமனையில்

# 'பி பொசிட்டிவ்' குருதிக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவில் 'பி பொசிட்டிவ்' வகை குருதிக்குத் தற்போது கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும், இதனால், நோயாளர்களுக்குத் தேவையான குறித்த வகைக் குருதியை வழங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த வகை குருதிக் கொடையாளர்கள், புதிதாக குருதிக் கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவுக்கு நேரடியாக வருகை தந்து குருதிக்கொடை வழங்க முடியுமெனவும், 0772105375 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது வரவை உறுதிப்படுத்திக் கொள்ள முடியுமெனவும் குருதி வங்கிப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (அ-ஒ-66)

## சாவகச்சேரியில்...

பெண் ஒருவரே, வயல் பகுதியில் பற்றையோரமாக ஆயுதங்கள் இருப்பதைக் கண்டுள்ளார்.

இது தொடர்பில் அந்தப்பகுதி கிராம அலுவலர் ஊடாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைவாக ,சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் ஆயுதங்களைப் பார்வையிட்டதுடன் அவ்விடத்தில் பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று ஆயுதங்களைச் செயலிழக்க வைக்கும் நடவடிக்கையைச் சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ஒ-100)

## படகு...

படகில் ஆறு இளைஞர்கள் பயணித்துள்ளனர், அவர்களில் நால்வர் உயிரைக் காப்பாற்றியுள்ளனர்.

மாமாங்கத்தைச் சேர்ந்த தவசீலன் கிரிசாந் (வயது - 19), பிரபாகரன் பிரியன் (வயது - 18) ஆகிய இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர். ரிக்ரொக் காணொலி பதிவு செய்வதற்காகச் சென்றபோதே இந்த இடர் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-26)

# தேர்தலைப் பிற்போடல் அரசின் எத்தனமில்லை

## மொட்டுக்கட்சி தெரிவிப்பு

தேர்தலைப் பிற்போட அரசு முயற்சிக்கவில்லை. அடுத்த தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற்று ஆட்சியைத் தக்கவைப்போம் - இவ்வாறு மொட்டுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் சோறு சாப்பிடும் மக்கள் தான் வாழ்கின்றனர். புல்லைச் சாப்பிட்டு உயிர்வாழும் மக்கள் நாட்டிலில்லை. எதிரணிகளின் அரசியல் நாடகம் மக்களுக்குத் தெளிவாகப் புரியும்.

அடுத்த தேர்தலில் சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே வெற்றிபெறும். தேர்தலைப் பிற்போடும் எண்ணம் அரசுக்கு இல்லை. அடுத்த தேர்தலிலும் நாம்தான் வெற்றிபெற்று ஆட்சியமைப்போம்- என்றார். (ச-44)



# யாழ். யுனைட்டெட் பிறீமியர் லீக் ஒஸ்மெனியன் லயன்ஸ் கிண்ணம்

யாழ்ப்பாணம், ஒக். 9

யாழ்ப்பாண ஐக்கிய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட யாழ்.யுனைட்டெட் பிறீமியர் லீக் போட்டித் தொடரில் ஒஸ்மெனியன் யங்ஸ் அணியினரை வீழ்த்தி ஒஸ்மெனியன் லயன்ஸ் எவ்.சி. அணி 1:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றியீட்டியுள்ளது.

யாழ்.யுனைட்டெட் பிறீமியர் லீக் போட்டித் தொடர் அண்மையில் ஐ.பி.எல். பாணியில் இடம்பெற்றது.

இதில் 'ஏ.எல்.' நாசர், 'ஏ.எல்.' பலாஹ், ஒஸ்மெனியன் யங்ஸ், ஒஸ்மெனியன் லயன்ஸ் எவ்.சி. ஆகிய அணிகள் போட்டியிட்ட நிலையில் ஒஸ்மெனியன் லயன்ஸ் எவ்.சி. அணி வென்றுள்ளது.

இதில் ஒஸ்மெனியன் லயன்ஸ் அணியின் வீரர்களான அக்ரம் 'ஆர்.எம்7' பின்களத்தில் சிறப்பாகச் செயற்பட்டதுடன் இயாஸ் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். (ச)

# தேவையற்ற சட்டங்கள் நாட்டுக்கு அவசியமில்லை

## ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.9

இலங்கையின் தற்போதைய நிலையில் தேவையற்ற சட்டங்களான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பன தற்போதைய சூழ்நிலையில் தேவையற்ற ஒரு விடயம் என தமிழ் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

நாட்டில் தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு மற்றும் ஊடக நிகழ்நிலை காப்புச் சட்ட வரைவு என்பன சட்டங்கள் ஆக்கும் செயற்பாடுகள் முழு வீச்சில் இடம் பெற்று வருகின்றன. இந்த சட்ட வரைவுக்கு தற்போது நாடு இருக்கும் நிலையில் தேவையற்ற ஒன்று. நாட்டுக்கு ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படுமானால் 24 மணித்தியாலத்துக்குள் நாடாளுமன்றத்தைக் கூட்டி சட்டம் இயற்ற இலங்கை நாடாளுமன்றத்தால் முடியும். உதாரணமாக கூற வேண்டுமானால் வேறு யாரையும் அல்ல. தற்போது முல்லைத்தீவு நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறியதான செய்திகள் ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்ற நிலையில் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன.

நீதிபதி விடயத்தை பெரிதாக்கவேண்டிய தேவை இல்லை, நிறுத்திக் கொள்ளலாம் என்பதே எனது கருத்து. சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறுவது இன்று நேற்று இடம் பெறும் விடயம் அல்ல என்பது சட்டத்துறை சார்ந்தவர்களுக்குத் தெரியும்.

இலங்கையில் நடைமுறையில் இருக்கும் சட்டங்கள் ஆட்சி அதிகாரம் உள்ளவர்களை பாதுகாக்கின்ற நிலையில் மக்களைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் தேவையில்லை என்றார். (எ-27)

# சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக வர்ண ஜெயசுந்தர

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக வர்ண ஜெயசுந்தர பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்டுவந்த வர்ண ஜெயசுந்தர, யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகராகவும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை பணிப்பாளராக 3 வருடங்கள் கடமையாற்றிய இவர் இலங்கை வரலாற்றில் பல குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-27)


## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 09 . 1970

மறைவு 07 . 10 . 2023



### தியாகராஜா வசீதரன் (வசி)

தாவடி, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட வசீதரன் (வசி) கடந்த (07.10.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராஜா கமலாதேவி தம்பதியரின் இளைய மகனும், நளாயினி (ஜமுனா), மாலினி (மாலா - கனடா), நந்தினி (நந்தா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கிருஷ்ணதாஸ் (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), செல்வக்குமாரன் (சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்) ஆகியோரின் மைத்துனரும், றங்ஹறவி, கேசாயி, அபினா (கனடா), அஞ்சனா (கனடா), அட்சயன் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (12.10.2023) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

44 / 12, சேச்லேன், தாவடி, கொக்குவில்.

(cs 52425) N.1

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டு இறைச்சியுடன் சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணம், ஒக். 9

அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரத்தில் மாட்டு இறைச்சியுடன் இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வர்ணப்பூச்சு வாளிக்குள் வைத்துக் கொண்டு 24 கிலோகிராம் மாட்டு இறைச்சியை எடுத்துச் சென்றுள்ளனர். வீதி சோதனை கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் வாளியைத் திறந்து பார்த்த போது மாட்டு இறைச்சி எடுத்துச் சென்றமை தெரிய வந்துள்ளது. (ஒ-23)

## உரம் விநியோகம்

கொழும்பு, ஒக். 9

எதிர்வரும் பெரும்போகத்துக்குத் தேவையான 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இன்று முதல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் அரசாங்க உர நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார். (ஒ-இ)


### தேவை

நோயாளி ஒருவரிற்கு சக்கரநாற்காலி (Weelchair) பாவித்தது தேவை.

075 296 8696 (cs 52422)(N.1)

### பணியாளர் வெற்றிடம்

யாழ். நகரில் அமைந்துள்ள யாழ். - கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவையின் யாழ் நகரில் அமைந்துள்ள அலுவலகத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

* ஆசனப்பதிவாளர்
* எழுதுனர்கள்

ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 076 0094 946

CR 407/40 M-1

### வேலை ஆட்கள்தேவை

தச்சுவேலை, மேசன் வேலை உதவி ஆட்கள் தேவை

இடம் :- யாழ்ப்பாணம், கிளிநொச்சி.

தொடர்பு : 0775533601, 0716933601


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பற்றிக் றோஸ்மலர் (வேவி)

பிறப்பு 16-08-1946 இறப்பு 09.10.2021

ஆயிரம் உறவுகள்
அவனியில் இருந்தாலும்
அம்மாவின் உறவு போல்
ஆருளர் இவ்வுலகில்
அழியாத நினைவுகளுடன்
ஆண்டு இரண்டில்.....

149/2, கதிர்றல் லேன், யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்


(cs 26527) (N.1)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

### நாகலிங்கம் வரதராஜா

(ஓய்வுநிலை பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை)



யாழ். ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இல.20, சங்கத்தானை டச்சு றோட், சாவகச்சேரியைப் வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் வரதராஜா நேற்று (08.10.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

077 085 6058, 077 077 9745

(cs 52424) (N.1)

## மரண அறிவித்தல்



### கிருஷ்ணபிள்ளை சிவசோதி

புலோலி மத்தி அவ்வொல்லை பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை சிவசோதி நேற்று (08.10.2023) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை (சோதிடர்) பார்வதி ஆகியோரின் ஏகபுத்திரனும் கார்த்திகேசு (ஓய்வு பெற்ற ஆசிரியர்) இராசமணி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கலாவதியின் அன்புக் கணவரும் பாலகௌரி (ஆசிரியை அல்வாய் அம்பாள் வித்தியாலயம்) கௌசலை (லண்டன்). கிருஷ்ணகாந்தன் (ஆசிரியர் யா/ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்). பாரதி (ஆசிரியை ஹாட்லிக் கல்லூரி) கௌதமி (முகாமைத்துவ உதவியாளர் நல்லூர் பிரதேச சபை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கணேஸ் (வர்த்தகர்). இரவீந்திரன் (லண்டன்). சர்மிளா (ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி). தஜீபன் (வர்த்தகர்). சொருபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு மாமனாரும் குணநாயகம் (ஓய்வு நிலை முகாமையாளர்). செல்வநாயகம். குலநாயகம் (வைத்திய கலாநிதி). திருமகள் (வைத்திய கலாநிதி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சேரலாதன். பிரவீணா. பூரணி. சிந்தூரி. சாரங்கி. கவின்சீரன், ஆருஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.10.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.**

**இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

தகவல்: குடும்பத்தினர்.

(cs 26528 M-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 07 . 1959



மறைவு 06 . 10 . 2023

### திருமதி வானதி பரமேஸ்வரன்

(ஓய்வுபெற்ற நூலகர் - யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)

இணுவில் மேற்கு கந்தசாமி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வானதி பரமேஸ்வரன் 06.10.2023 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான நவரத்தினம் கனகமணி தம்பதியரின் அன்பு மருமகளும். பரமேஸ்வரன் அவர்களின் பாசமிகு மனைவியும் வசந்தன் (கனடா). பகீரதி. பகீரதன் (கனடா). சிவமதி (கனடா). சிவதர்சன் (கனடா). சுமதி (கனடா). குகேந்தி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கோவேழன் (Software Enginner). கௌரீசன் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். தரசுதா (முகாமைத்துவ உதவியாளர் - மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மாமியும் கேசிதன், கோஜனாஸ்ரீ ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (09.10.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

கந்தசாமி கோயிலடி,
[illegible]

தகவல்: குடும்பத்தினர்.

(CS 26530) M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழகத்துக்கான...

தமிழகத்தின் நாகப்பட்டினத்தில் இருந்து நேற்றுக் காலை புறப்பட்ட செரியாபாணி எனும் குளிரூட்டப்பட்ட கப்பல் பி.ப. 1.15 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்திருந்தது. இந்தக் கப்பலில் பணியாற்றும் 14 பணியாளர்கள் மட்டுமே வருகை தந்திருந்தனர். பரீட்சார்த்த நடவடிக்கைகளின் போது கப்பல் சேவைக்கு பயன்படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலைவரம் சகல விடயங்களும் கணக்கெடுக்கப்பட்டன. பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொண்டமையை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.
சுமார் அரை மணி நேரம் தரித்து நின்ற பின்னர் மதியம் 1.45 மணியளவில் மீண்டும் இந்தக்கப்பல் நாகப்பட்டினம் நோக்கி புறப்பட்டது.
நாகப்பட்டினம் இலங்கையிலேயே பயணிக்க இருவழிக் கட்டணமாக 53 ஆயிரத்து 500 ரூபாவும், ஒரு வழிக் கட்டணமாக 27 ஆயிரம் ரூபாவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பயணிகள் தங்களுடன் 40 கிலோ வரை உள்ள பொருள்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவர். இந்தக் கப்பல் சேவையின் மூலம் 3 மணித்தியாலத்தில் நாகபட்டினத்தைச் சென்றடைய முடியும்.
நாளை ஆரம்பமாகும் சேவையானது, மழைகாலம் காரணமாக எதிர்வரும் 23ஆம் திகதியுடன் நிறுத்தப்பட்டு மீண்டும் அடுத்த ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி மீள ஆரம்பமாகும்.
25 கோடி இந்திய ரூபா செலவில் கொச்சினில் தயாரிக்கப்பட்ட செரியாபாணி கப்பல் மணித்தியாலத்துக்கு 36 கிலோமீற்றர் வேகத்தில் பயணிக்கக்கூடியது. 14 ஊழியர்கள் மற்றும் 150 பயணிகளுடன் பயணிக்கும் வசதிகளைக் கொண்ட குறித்த கப்பலில், பயணிகளுக்குத் தேவையான சிற்றுண்டி, தேநீர், குளிர்பானங்கள் போன்றவற்றை கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளும் வசதிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. (அ-ஒ-20-27)







## தமிழர்களின்...

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்ட விரோத குடியேற்றவாசிகளான சிங்களவர்களின் ஆக்கிரமிப்பை தடுத்துநிறுத்துமாறு கோரி அந்தப்பகுதியைச் சேர்ந்த கால்நடைப் பண்ணையாளர்கள் கடந்த 24 நாள்களாக போராடிவருகின்றனர்.
செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருவதை முன்னிட்டு நேற்று செங்கலடி கொம்மாதுறையில் மிகப் பெரிய கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்புகள் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.
கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்துக்கு அருகில் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் அப்பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித்தடைகள் போடப்பட்டிருந்தன.
பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவு உள்ளதாகவும் வீதியை மறித்து போராடிமுடியாது எனவும் கோரிய நிலையிலேயே போராட்டமானது கடுமையாக மாறி பொலிஸாரின் தடையை மீறி செல்ல முற்பட்ட நிலையில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது.
இதன்போது போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே பெரும் இழுபறி நிலையேற்பட்ட அதேநேரம் தடையை உடைத்துச்செல்ல போராட்டக்காரர்கள் முற்பட்ட நிலையில் இருதரப்பினருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது. போராட்டத்தின் போது தடையையுடைத்துச்செல்ல முற்பட்டவர்களை பொலிஸார் தடுத்த நிலையில் பெரும் களேபரம் ஏற்பட்டது.
இதன்போது தடையுடைத்துச் செல்ல முற்பட்ட மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவினர் சங்க தலைவி மீது பொலிஸார் தாக்குதல் முயற்சிகளை முன்னெடுத்தனர்.
இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா. சிறிநேசன், பா. அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க. சுகாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-ஒ-இ)

## பாடசாலை...

பொலிஸார் தெரிவித்தனர். வீட்டின் அறையினுள் படுத்திருந்த தமது மகனை காணவில்லை எனப் பெற்றோர் தேடியபோதே, அயல் வளவில் தவறான முடிவு எடுத்து அந்த மாணவன் உயிரிழந்துள்ளான் என்பது தெரியவந்துள்ளது. (அ-ஒ-26-125)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார். மன்னார், பெரியகடையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சந்தியோகு (வயது - 72) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.
இவர் கடந்த 19ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சாப்பாடு வாங்குவதற்கு மன்னார் நகரை நோக்கிச் சென்றுள்ளார். எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் மத்திய கோட்டையும் தாண்டிச் சென்று மோதியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த சந்தியோகு மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ஒ-26)

## ஹெரோய்னுடன்...

கைது செய்யப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ். மாவட்டக் குற்றத்தடுப்பு ப்பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமைய கோப்பாய் செல்வபுரம் பகுதிக்குச் சென்ற பொலிஸார் 250 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் 23 வயதான இளைஞனையும், 150 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் 24 வயதான இளைஞனையும் கைது செய்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (அ-ஒ-125)

## இனியாவது...

காக்கின்றது? என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.
தாவடியில் இடம்பெற்ற தாச்சிப் போட்டியொன்றில் கலந்து கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் இவ்வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி நாட்டைவிட்டு வெளியேறி இருக்கின்றார். நாட்டைவிட்டு நீதிபதி வெளியேறுகின்றார் என்றால் சாதாரண மக்களுக்கு எவ்வாறு நீதி கிடைக்கப் போகின்றது? நீதிபதியின் வெளியேற்றத்துக்கு காரணமனவர்கள் மீது நீதியமைச்சரோ, ஜனாதிபதியோ நடவடிக்கை எடுக்கவில்லை.
நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் இருந்துகொண்டு முன்னாள் கடற்படைத் தளபதி பேசிய பேச்சுக்கள் ஊடகங்களில் வெளியாகியிருந்தன. அந்தப் பேச்சுக்கள் சில தரப்புக்களை நீதிபதிக்கு எதிராகத் தூண்டியிருக்கும். அதனால்தான் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டு நாட்டிலிருந்து வெளியேறினார்.
நீதிபதியின் கட்டளையை ஜனநாயக ரீதியாக அதன் மேலவை நீதிமன்றங்களில் முறைப்பாடு செய்து மீள் ஆய்வுக்கு உட்படுத்தலாம். அவ்வாறு செய்யாமல் நீதிபதிக்கு எதிராக வெறுப்புப் பேச்சுக்கள் ஊடாக வெறுப்புணர்வை தூண்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இவற்றை ஜனாதிபதி ரணில் அனுமதித்துக்கொண்டிருக்கின்றார். அவரும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய போல தனிச் சிங்கள வாக்குகளால் வெல்வதற்கான இவற்றைச் செய்து கொண்டிருக்கின்றார்.
ஆனால் தமிழர்களுக்கு எதிரான இந்த விவகாரங்களுக்கு இந்தியாவால்தான் முடிவு கட்ட முடியும். இந்த நாட்டின் சிங்களவர்கள் இந்தியாவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். தமிழ் மக்கள்தான் எப்போதுமே இந்தியாவை அரவணைத்திருப்பவர்கள். அதை இந்தியா உணர்ந்துகொள்ளவேண்டும்.
2009ஆம் ஆண்டு வரையில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பு இருந்தது. அந்தப் பாதுகாப்பு அரண் தகர்க்கப்பட்ட பின்னர் சிங்கள தேசம் எங்களை மிதிக்கின்றது. இந்தியாவில் தமிழகம் மாத்திரம் எங்களுக்காக குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றது. ஒட்டுமொத்த இந்தியாவும் தமிழர் நலனுக்காக குரல் எழுப்பும்போதுதான் நாங்களும் அவர்களை ஆதரிக்க முடியும் - என்றார். (அ-ஒ-125)

## கதவடைப்பு....

யுறுத்தி தமிழ்க் கட்சிகளால் கதவடைப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. அதனை எப்போது நடத்துவது என்பது தொடர்பில் ஆராய்வதற்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு தந்தை செல்வா அரங்கில் நடைபெறவுள்ளது.
வர்த்தக சங்கத்தினர், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர். (அ-ஒ-26-27)

## நீதிமன்ற...

சம்பவத்தை அடுத்து விசேட குற்றத் தடுப்பு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இந்தக் கஞ்சாப் பொதி மாயமாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.
களஞ்சிய பொறுப்பில் இருந்த இருவர் கனடா செல்ல முற்பட்ட நிலையில் அவர்களுக்கு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், துப்புரவுப் பணியிலிருந்த பெண் ஒருவர் மத்திய கிழக்கு நாட்டுக்கு செல்ல முற்பட்ட நிலையில் அவருக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை மன்னார் நீதிமன்றம் மற்றும் மல்லாகம் நீதிமன்றம் என்பனவற்றிலும் சான்றுப் பொருள்களாக வைக்கப்பட்டிருந்த கஞ்சா காணாமற்போனமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் தினத்தை முன்னிட்டு சுன்னாகம் றோட்டரிக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் றோட்டரிக் கழகம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த சிறுவர்களுக்கான பரிசுப்பொதி வழங்கும் நிகழ்வு அரியாலை - பூம்புகார் உதயறிலா சிறுவர் கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச)

# வவுனியாவில் சிறுவர் தினம்

வவுனியா, ஒக். 9

வவுனியா மாவட்ட நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் அலுவலகத்தின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

வவுனியாவிலுள்ள 6 சிறுவர் அபிவிருத்தி நிலையங்களைச் சேர்ந்த சிறுவர்களின் பல்வேறு ஆற்றுகைகள் நிகழ்வில் இடம்பெற்றன.

தொடர்ந்து சிறுவர் தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட கலை, கலாசார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற்ற சிறுவர்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கிவைக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர் தி. மனோகரராஜா, மேலதிக மாவட்டச் செயலர் தி. திரேஸ்குமார்,

சிறுவர் அபிவிருத்தி நிலையங்களை சேர்ந்த முகாமையாளர்கள், சிறுவர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ச-110)









## பொருளாதார ஒத்துழைப்பு நாள்
# யாழில் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 9

இந்திய தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு நாள் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாண நகரிலுள்ள விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எச்.எம். சார்ல்ஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்றார்.

இந்தியத் துணைத் தூதுவர் உள்ளிட்ட தூதரக அதிகாரிகள், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிறீசற்குணராசா மற்றும் வர்த்தகர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ச-27,125)



வவுனியா விபுலானந்தாக் கல்லூரியில் மாணவர் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் 95 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 145 மாணவர்கள் போட்டியிட்டனர். (ச-110)



கனடா பெத்தாத்அம்மா அறக்கட்டளையின் நிதியனுசரணையில் வட்டுக்கோட்டை, மூளாய் பகுதியில் வாழும் அங்கவீனமுற்ற ஒருவருக்கு கோழிகளும் கோழிக்கூடும் வாழ்வாதார உதவியாக வழங்கப்பட்டன. மாநகரசபை முன்னாள் உறுப்பினர் நா.தனேந்திரன் இதனை வழங்கி வைத்தார். (ச)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 மின்னஞ்சல் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.